DAY – 03 SEAT [redacted]

2026 | II | 12 1100 **J-114** (TAM)

TAMIL (09)

Time : 3 Hrs. **(12 Pages)** **Max. Marks : 80**

பகுதி-1 : உரைநடை - 18

Q 1-அ **பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து உரிய விடைகளைத் தருக.** (6)

1) வலைபடத்தை பூர்த்திசெய்க. (2)



இன்று சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுப்பகுதியும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்தற்கான தடயங்

https://www.maharashtrastudy.com

களைக் கொண்டுள்ளன. சென்னைக்கு அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப்பணி அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது. அங்கு ஓடக்கூடிய கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று எனலாம். பல்லாவரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கற்கோடா, இந்திய அகழ்வாய்வுத் துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனைய ஏற்படுத்தியது. மேலும் கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் தொல்பழங்கால மானுட எச்சங்கள் இப்பகுதியின் பழமையை நமக்கு உணர்த்துகின்றடை. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர், 2ஆம் நூற்றாண்டில் 'தாலமி' என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப் பட்டுள்ளது.

சென்னை நகரத்தின் பழமையான கோயில்களான திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருமுல்லைவாயில் ஆகியவற்றில் உள்ள கோயில்கள் பாடல் பெற்று, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்களாக உள்ளன.

2) **கோடிட்ட இடத்தை நிரப்புக.** (2)

i. மனித நாகரிகத்தின் பழமையை .... ஆண்டுகளுக்கும் முற்பட்டது.

ii. சென்னைக்கு அருகேயுள்ள .... போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப்பணி, ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

iii. பல்லாவரத்தில் .... கண்டுபிடிக்கப்பட்டன.

iv. 2 ஆம் நூற்றாண்டில் .... என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகம் சுட்டப்பட்டுள்ளது.

https://www.maharashtrastudy.com

SEAT NUMBER

3) உனக்கு தெரிந்த நகரத்தை பற்றி எழுதுக ? (2)

Q 1 -ஆ பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து உரிய விடை தருக (6)

1) வலைபடத்தை பூர்த்தி செய்க (2)



ஒலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு. எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவதுண்டு. மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள். ஒரு பக்கம் வாருவதற்குக் கத்தியும் மறு பக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே பேனாக்கத்தி என்ற பெயர் வந்ததென்று தோற்றுகின்றது. ஒரு பக்கத்தில் இரண்டு கத்தியும் ஒரு பக்கம் இரண்டு எழுத்தாணியும் உள்ள மடக்கெழுத்தாணிகளும் இருந்தன. ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக இருபது முப்பது வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத் தாணிகள் இருந்தன. நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்தோடே ஏட்டில் எழுதுவதுண்டு, மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள். இதற்கு சட்டமொறு பெயர். சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர்.

https://www.maharashtrastudy.com

2) **கீழ்கண்ட தொடர்கள் சரியா ? தவறா ? என எழுதுக.** (2)

i. ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு.

ii. ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக இருப்பது முப்பது வரி வரையில் இருக்கும்.

iii. தூக்கு என்பது ஒரு வகையான எழுத்தாணி.

iv. பல்லாவரத்தில் தங்கம் கண்டு எடுக்கப்பட்டது.

3) **இன்றைய கால கல்வி பற்றிய உனது கருத்துக் களை எழுதுக?** (2)

Q I - இ பின்வரும் பகுதியைப் படித்துணர்ந்து உரிய விடை தருக. (6)

1) வலைபடத்தை பூர்த்திசெய்க. (2)



https://www.maharashtrastudy.com

SEAT NUMBER | | | | | | |

தமிழ்த் திருநாடு சான்றோர் பலரை நாட்டிற்கு
வழங்கி அணி செய்திருக்கிறது
வாழ்ந்தவர் பலர் மொழிக்காக
விழுந்தவர் பலர் நாட்டின் விடுதலைக்காக
சிதைத்தவர் சிலரே மண்டிக்கிடந்த மூடக் கருத்துகள்
பழந்தமிழ் சமுதாயத்தில் அவருள் ஒருவரே பெரியார்
பெற்றிருந்தனர் பெண்கள் நன்மதிப்பு
விரலியாய்த் திகழ்ந்த புலவராய். பாடணியாய்.
மதிக்கப் பெற்றவர். மாண்புடை மன்னரால்
மன்னனின் மறங்கொண்ட மன்னர்கள்
பெருமையையும் பகையை மாற்ற தூது சென்ற
பெற்றிருந்தனர் அக்காலத்து பெண்கள்
மாறியது. அக்காலச் சூழல் பிற்காலத்தே
வந்தவர் கூறிய கருத்தை எல்லாம் இங்கு
வாழ்ந்தவர் ஏற்றனர். பெண்களை அடிமைப்
படுத்தினர். எனவே நாட்டு விடுதலைக்குப்
போராடிய பெரியார் பெண்களின் சமூக
விடுதலைக்கும் போராடினார். பெரியாரின் பெண்
விடுதலை சிந்தனைகள் இரண்டு வகை ஒன்று
அடிப்படைத் தேவை. பெண்கல்வி, பெண்ணுரிமை,
சொத்துரிமை, அரசுப் பணி ஆகியன அடிப்படைத்
தேவைகள். கல்வி நலம் பெற்ற பெண்பார்
புலவருக்கு அடி பணிந்தனர்.

2) **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (2)

i. நாட்டு விடுதலைக்குப் போராடிய பெரியார் பெண்களின் .... போராடினார்.

ii. பழந்தமிழ் சமுதாயத்தில் .... நன்மதிப்பு பெற்றிருந்தனர்.

iii. தமிழ்த்திருநாடு .... பலரை நாட்டிற்கு வழங்கி அணி செய்திருந்தது.

iv. கல்வி நலம் பெற்ற பெண் பார் புலவருக்கு .... **பணிந்தனர்.**

https://www.maharashtrastudy.com

3) நீ நமது நாட்டு முன்னேற்றத்திற்காக என்னென்ன செய்வாய்? (2)

பகுதி-II : செய்யுள் - 16

Q II - அ பின்வரும் பாடலை படித்துணர்ந்து பாடலின் தலைப்பு, ஆசிரியர் பெயர், பாடலின் மையக்கருத்து, பாடலின் திரண்டக் கருத்து, பிடித்த வரிகள், பிடிக்கக் காரணம் இவற்றை எழுதுக. (8)

இந்த மனித இருப்பு
ஒரு விருந்தினர் இல்லம்
ஒவ்வொரு காலையும் ஒரு புதுவரவு
ஓர் ஆனந்தம்
சற்று மனச் சோர்வு
சிறிது அற்பத்தனம்
நொடிப் பொழுதேனும் விழிப்புணர்வு
எதிர் பாராத விருந்தாளிகளாக
அவ்வப்போது வந்து செல்லும்
எல்லாவற்றையும் வரவேற்று விருந்தோம்பு!
துக்கங்களின் கூட்டமாக அவை
இருந்து உனது வீட்டைத் துப்புரவாக
வெறுமைப் படுத்தும் போதும்,
ஒவ்வொரு விருந்தினரையும்
கௌரமாக நடத்து
புதியதோர் உவகையாக
அவை உன்னை
தூசி தட்டித் தயார் படுத்தக் கூடும்.

Q II - ஆ கீழ்வரும் செய்யுள் பகுதியை படித்துணர்ந்து வினாக்களுக் குரிய விடை தருக. (8)

1) வலைப் படத்தை பூர்த்தி செய்க. (2)



https://www.maharashtrastudy.com

SEAT NUMBER

அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது
இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்
செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது
காலத்தினால்செய்த நன்றி சிறிது என்னும்
ஞாலத்தின் மாணப் பெரிது
பயன் கூக்கான் செய்த உதவி நயன்கூக்கின்
நன்மை கடலிற் பெரிது
தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாக
கொள்வர் பயன்தெரிவார்
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று
எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

2) **கோடிட்ட இடத்தை நிரப்புக.** (2)

i. இயல்மனான் இல்வாழ்க்கை .... என்பான் முயல்வாருள் எல்லாம் தலை.
ii. செய்யாமல் செய்த உதவிக்கு............ வானகமும் ஆற்றலாது.
iii. நன்றி மறப்பது நன்றன்றது .... அன்றே மறப்பது நன்று.
iv. காலத்தினால் செய்த நன்றி சிறிது எனிலும் .... மாணப் பெரிது.

3) **எதிர்ச்சொல் தருக.** (2)

i. நன்மை x
ii. பெரிது x

https://www.maharashtrastudy.com

தொங்கிக் கொண்டு பயணம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர் இதனால் மாணவர்கள் தங்கள் உயிரையும் உடல் உறுப்புகளை இழக்க நேரிடுகிறது. இது அவர்களின் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரிய இழப்பு ஆகும். இந்நிலை எதிர்வரும் காலங்களில் முற்றிலும் மாற வேண்டும்.

வினாக்கள் :

i. விபத்துகள் மிகுதியாக நடக்க காரணங்கள் யாவை? (2)

ii. பள்ளி மாணவர்கள் சாலைகளில் செல்லும்போது செய்யும் தவறு என்ன ? (2)

iii. எதிர்பாராத சூழலில் உன் கண்முன் விபத்து ஏற்பட்டால் நீ என்ன செய்வாய் ? (2)

iv. விபத்துகளால் மாணவர்களுக்கு ஏற்படும் இழப்பு களை எழுதுக ? (2)

பகுதி-IV : இலக்கணம் - 16

Q IV **கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1) **வேற்றுமை உறுப்பு கண்டறிந்து எழுதுக.** (2)

i. மாணவர்கள் வகுப்பறையைச் சுத்தம் செய்தனர்.

ii. கல்வியில் பெரியவர் கம்பன்.

2) **தன்வினையா? பிறவினையா? எனக் கண்டறிந்து எழுதுக.** (2)

i. அழகன் பாடம் எழுதுகிறான்.

ii. பூங்குழலி பொம்மை செய்வித்தாள்.

https://www.maharashtrastudy.com

4) உன் நண்பன் உனக்கு செய்த உதவி பற்றி மறக்கமுடியாத நிகழ்வினை எழுதுக. (2)

பகுதி-III : துணைப்பாடம் - 12

QIII - அ ஏதேனும் வினாக்களுக்கு விடை தருக. (4)

1) தம்பி நெல்லையப்பருக்கு கடிதம் எழுதியவர் யார்? (1)

2) முதல்கள் சிறுகதையின் ஆசிரியர் பெயர் எழுதுக ? (1)

3) சாலை விபத்துகளை எவ்வாறு தவிர்க்கலாம் ? (2)

https://www.maharashtrastudy.com

QIII - ஆ பின்வரும் பகுதியைப் படித்துணர்ந்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக. (8)

இன்றைய நவீன உலகில் அவசரம் என்கிற நோய் எல்லோரையும் பிடித்திருக்கிறது வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு, போதிய பயிற்சி இன்மை, தட்ப வெப்ப நிலை, இயந்திரக் கோளாறு, மிகுதியான ஆட்களையோ, சரக்குகளையோ, ஏற்றிச் செல்வது, தொடர்வண்டி இரும்பு பாதை களை கவனிக்காமல் கடப்பது போன்ற பல காரணங்களால் விபத்துகள் மிகுதியாக நடக்கின்றன குறிப்பாக மது குடித்துவிட்டு ஊர்தி ஓட்டுவதால் நிறையவே விபத்துகள் நடக்கின்றன. இவைதான் பெரும்பாலான விபத்துகளுக்கு காரணமாக அமைந்து விடுகின்றன

பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளை தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் மாணவர்கள் சிலர் சாலைகளில் விளையாடுவது, கவனிக்காமல் திடீரென்று சாலையை கடப்பது, சாலையின் நடுவே செல்வது, சாலையை அடைத்துக்கொண்டு செல்வது, வேகமாக செல்லும் வாகனத்தில் பின்புறத்தை பிடித்து கொண்டு மிதிவண்டியில் செல்வது, ஓடும் பேருந்தில் இறங்குவது, பேருந்தில் படிக்கட்டில்

https://www.maharashtrastudy.com

3) **அடைப்புக்குறிக்குள் கொடுத்தவாறு மாற்றுக** (2)

i. தேசியக் கொடி குடியரசுத் தலைவரால் ஏற்றப்பட்டது. (செய்வினையாக்குக)

ii. பறவை கூடு கட்டியது. (செயப்பாட்டு வினையாக்குக)

4) **வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2)

i. நாள்தோறும்

ii. இன்றியமையாத

5) **உவமையா ? உருவகமா ? எனக் கண்டறிந்து எழுதுக.** (2)

i. இறைவனின் அடிமலர் தொழுதேன்.

ii. குழந்தை முத்துப்பல் காட்டியது.

6) **தனி வாக்கியமா ? தொடர் வாக்கியமா ? கலவை வாக்கியமா? எனக் கண்டறிந்து எழுதுக.** (2)

i. இராமையா ஊட்ட மிகு உணவு உண்டார்.

ii. பொது அறிவு நூல்களைத் தேடி படைத்தார்; போட்டி தேர்தலில் வெற்றி பெற்றார்.

7) **கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் பெயர்ச் சொல், பிரதி பெயர்ச்சொல் கண்டறிந்து எழுதுக.** (2)

i. மயில் தோகை விரித்து ஆடும்.

ii. அது அழகாக இருக்கும்.

https://www.maharashtrastudy.com

SEAT NUMBER

8) **அடைப்புக்குறிக்குள் கொடுத்தவாறு மாற்றுக.** (2)

i. டாக்டர் அப்துல்கலாமை அனைவரும் அறிவர்
(வினா வாக்கியமாக மாற்றுக)

ii. இமயமலை மிகவும் உயரமானது.
(உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக)

பகுதி-V : எழுத்துத்திறன் - 18

QV - அ **கடிதம் வரைக.** (4)

நீ சென்று வந்த இன்பச் சுற்றுலா பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.



அல்லது

"பார்லே ஜீ" பிஸ்கட் கம்பனியைச் சுற்றிப் பார்க்க அனுமதி கேட்டு நிறுவன செயலாளருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக.



QV - ஆ **நேர்காணல்.** (4)

மட்டைப்பந்து விளையாட்டு வீரர் தோனியிடம் நேர்காணலுக்கான எட்டு வினாக்களைத் தயார் செய்க.

https://www.maharashtrastudy.com

QV - இ குறிப்புகளை பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வரைக. (6)

1. பொங்கல் பண்டிகை.



2. சிறுசேமிப்பின் பயன்கள் பற்றி எழுதுக.



QV - ஈ பழமொழிகளை விவரித்து எழுதுக. (4)
(ஏதேனும் ஒன்றிற்கு மட்டும்)

1. ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
2. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

அல்லது

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை மொழி பெயர்த்து எழுதுக.

1. A friend in need is a friend indeed.
2. Little Strokes fell great oaks.
3. Food is essential for all living things.
4. Gandhiji loved and respected truth more than anything else.

◆◆◆

https://www.maharashtrastudy.com